பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 18 சனிக்கிழமை 03.09.2022 கதிர் 300

இது ரகசியம் அல்ல!

பெரும்பாலும் அரசியல்வாதிகள் தாங்கள் நாக்கைப் புரட்டிப் போடும்போது மக்களை முட்டாள்கள் என்று நினைத்து விடுகிறார்கள்.

அப்படி ஒரு பேச்சை இப்போது முன்னாள் அமைச்சரும் மொட்டுக் கட்சியின் அதிருப்திக் ☞2

# இடைக்கால பட்ஜெட் நேற்று நிறைவேற்றம்



## மீண்டும் பலத்தைக் காட்டினார் ரணில்
## ஆதரவு – 120 எதிர்ப்பு – ஆக 5 மட்டுமே

கொழும்பு, செப்ரெம்பர் 03

2022ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுத் திருத்தச் சட்டமூலத்தின் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று மாலை நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும், எதிராக 5 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன் பிரகாரம், 115 மேலதிக வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. ☞2

## ஜப்பானின் கோரிக்கை

இலங்கைக்கு கடன் வழங்கிய சீனா, இந்தியா போன்ற நாடுகளை இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் இணையுமாறு ஜப்பான் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜப்பானின் டோக்கியோவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே ஜப்பானிய நிதி அமைச்சர் சுனிச்சி சுசுகி இந்த கோரிக்கையை விடுத்தார். ☞2

## இன்றும் நாளையும் ஒரு மணித்தியாலம் மட்டுமே மின்வெட்டு

இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆக ஒரு மணித்தியாலம் மாத்திரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## எரிவாயுவின் விலை மேலும் குறையும்



எரிவாயு விலை நாளை மறுதினம் திங்கட்கிழமை மீண்டும் குறைக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.


## கோட்டாவைப் பிரதமராக்கச் சூழ்ச்சி
### எதிரணி பகிரங்கக் குற்றச்சாட்டு



கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பவுள்ள நிலையில் அவரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வந்து பிரதமராக்கும் அரசியல் சூழ்ச்சி இடம்பெற்று வருகின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு இடம்பெற்றதைப் போன்றே தற்போதும் அரசியல் ☞2

## கோட்டாவைப் பதவியில் இருந்து விரட்டியவர் அமெரிக்கத் தூதரே!
### வாசுதேவ நாணயக்காரவின் கண்டுபிடிப்பு இது



இலங்கையில் போராட்டங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கே காலி முகத்திடல் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினார். ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து விரட்டினார் எனக் ☞2

## ஜெனிவா வியூகம் குறித்து சப்ரி - விஜேதாஸ ஆராய்வு

இம்முறை கூடும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் போது, இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும், எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்களின் ☞2

## தொடரும் துப்பாக்கிச்சூட்டுக் கொலைகள்: பின்னணி தொடர்பில் பொலிஸ் விளக்கம்



நாட்டில் கடந்த சில மாதங்களாகத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இதன்பின்னணி தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அத்தியட்சகர் நிஹால் தல்துவ ஊடகங்களிடம் நேற்று கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த மே 31 ஆம் திகதி தொடக்கம் நாட்டின் பல பகுதிகளில் பதிவாகும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள், ☞2

# சிறுபான்மையினரை அடக்கியாள முயல்வது கூட்டுப் பலவீனம் என சந்திரிகா விமரிசனம்



ராஜபக்ஷவினரின் ஆட்சியால் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருவதாகவும், இந்த சூழ்நிலையில் இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்குத் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்கிறார் எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அணிசேராக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையில், ராஜபக்ஷக்கள் குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருந்தனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதுபிற நாடுகளின் இலங்கை மீதான பார்வையை விலகச் செய்த நிலையில், நாடு தற்போது பிரச்சினைகளை சந்தித்து வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பான்மையாக உள்ளவர்கள் சிறுபான்மையினரை அடக்கி ஆள முயற்சிப்பது ஒரு நாட்டின் கூட்டு பலவீனமாக உள்ளதாகவும், இத்தகைய நடைமுறை ஒருபோதும் இருக்கக்கூடாது எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நிகழ்த்தி இருக்கின்றார்.

இலங்கை அரசியலில் மாறி மாறிக் குத்து கரணம் அடித்து, அணி மாறி, 'ஆய ராம் காயாராம்' அரசியல் நடத்திய பல பல்டி வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்களில் ஓரிடம் நிச்சயம் நமது பேராசிரியருக்கு உண்டு.

சந்திரிகா, ரணில், மஹிந்த, கோட்டா என்று அதிகாரத்தில் பலரிடம் அமைச்சுப் பதவியைப் பெறுவதற்காக அவ்வப்போது அரசியல் குத்துக் கரணங்கள் நடத்தியவர் அவர்.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமிழர் தாயகத்துக்கு சமஷ்டி கட்டமைப்பிலான ஒரு தீர்வைக் காண்பதற்கு புலிகளுடன் சேர்ந்து ஒஸ்லோவில் இணங்கிய இலங்கைப் பேச்சுக் குழுத் தலைவர் அவர்தான். அதன் பின்னர் இன்று வரை அதற்கு மாறாகவே கருத்துரைத்து வரும் ஒரு பல்டி பேர்வழி!

இப்போது ஒரு கருத்துரைத்திருக்கின்றார்.

"மாகாண சபை தேர்தலைக் கால வரையறையற்ற வகையில் பிற்போட்டுள்ளமை போன்று உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட முயற்சிக்கக் கூடாது. அப்படி முயற்சித்தால் அதற்கு எதிராக நீதிமன்றம் செல்வோம்" - என்று வெறும் புஸ்வாணப் பேச்சு பேசி இருக்கின்றார் அவர்.

இப்போது கூட 'முன்னைய மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தேர்தலை நடத்த வழி செய்யலாம்' என்று ஒரு வரியில் ஒரு சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் போதும். அடுத்த மூன்று மாத காலத்தில் அந்தத் தேர்தலை நடத்தி முடித்து விட முடியும்.

கடந்த இரண்டரை ஆண்டு காலம் மொட்டுக் கட்சி அரசின் சிரேஷ்ட அமைச்சராக இருந்தவர் அவர். இந்த மாகாண சபைத் தேர்தலை நடத்த அந்த ஒரு வரியில் சாதாரண சட்டத் திருத்தம் ஒன்றைப் பிரேரிக்காத அந்தச் சட்ட அறிஞர், இப்போது ஆளும் தரப்பிலும் இல்லாமல், எதிரணிப் பக்கத்திலும் அமராமல், திரிசங்கு நிலையில் தொங்கிக் கொண்டு நின்று எதோ பிதற்றுகின்றார்.

உள்ளூராட்சி தேர்தலை ரணிலின் அரசு ஒத்திவைக்கத்தான் போகின்றது. ஆனால் அதைச் சட்டரீதியாக அது செய்யும். அதற்கான சட்டத்தை அது நாடாளுமன்றில் நிறைவேற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த முயற்சியை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தி வெல்வது பெரும்பாலும் சாத்தியப்படாது. அது சட்டப் பேராசிரியருக்குப் புரியாதமை விந்தைதான்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவைதான் மக்கள் தங்கள் இறைமையை வெளிப்படுத்தும் வாக்களிப்புகள் என்று அரசமைப்புக் கூறுகின்றது. மாகாண சபைத் தேர்தல்களையும் இந்த வகைக்குள் அடக்கலாம் என்று உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

மக்கள் தங்கள் இறைமையைப் பிரயோகிக்கும் வகைக்குள் உள்ளூராட்சி தேர்தல் அடங்கவில்லை. அது தொடர்பில், அதுவும் பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி, தேர்தலை ஒத்திவைக்கும் விதத்தில் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டால், அதைச் சட்டச் சவாலுக்கு உட்படுத்தி வெல்லுவது என்பது அசாதாரணமே. இது நமது சட்டப்பேராசிரியருக்குப் புரியாதமை வியப்புக்குரியது. யதார்த்தம் தெரிந்து கொண்டு, அரசியலுக்காக அப்படி அவர் பேசுகின்றார் என்று நினைக்கின்றேன். இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா.... விட்டு விடுங்கள்!

* * *

இன்னொரு கொசுறு தகவல். என் செய்தியாளர் தந்த செய்தியை அப்படியே தருகிறேன். இந்த தகவலும் அரசியல் குழப்பத்தை - அதிர்வுகளை - உண்டு பண்ணும் என்று நினைக்கிறேன். என் செய்தியாளர் ந. லோகதயாளன் தந்த செய்தி இதுதான்:-

மன்னார் மாவட்டத்திலும் சீனாவிற்கு பெரும் கடல் அட்டைப் பண்ணை ஒன்று வழங்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதிகளை அதிகரித்தல் என்னும் பெயரில் உள்ளூர் பாரம்பரிய மீன்பிடி முறைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பண்ணைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதாகத் தொடர்ந்தும் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இந்த நிலையில் எதிர்வரும் 13 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மன்னார் மாவட்டத்திற்கான ஒரு பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிகிறது. பண்ணைகளை ஊக்குவிப்பது தொடர்பிலும் ஆராயப்படவுள்ளது.

இந்தப் பயணத்தின்போது மன்னாரில் 3 கடலட்டைப் பண்ணைகள் அமைப்பது தொடர்பில் ஆராயப்பட இருக்கின்றது.

இந்த மூன்று கடல் அட்டைப் பண்ணைகளில் ஒன்று சீன நாட்டவர்களால் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, வடக்கில் பரவலாகக் கால் ஊன்ற முனையும் சீனாவிற்கு மேலும் ஒரு வாய்ப்பை ஏறபடுத்திக் கொடுக்க முயற்சிக்கப்படுவதாகவும், இதற்குத் தமது கடுமையான எதிர்ப்பு இருக்கும் எனவும் மன்னார் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

- இது செய்தியாளரின் தகவல்.

அப்பாடா... நமோ நாராயணா.... என் வேலை பூர்த்தி...!

விடயம் நன்மையில் முடிந்தால் சரி....!

**- மின்னல் -**

## ஜப்பானின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர் கடன் வசதியை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட ஒப்பந்தத்தை எட்டிய பின்னர் ஜப்பான் இதனை அறிவித்துள்ளது.

இலங்கைக்கு தொடர்பான கடன் வசதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த அடிப்படை நிபந்தனையாக, பிரதான கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்புக்கான உடன்படிக்கையை எட்டுவது அவசியம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் கடனைசெலுத்த முடியாத நாடாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னரே இலங்கை வங்குரோத்து நாடாக மாறியுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## இடைக்கால பட்ஜெட் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாக்கெடுப்பில் 43 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியின் மூன்று உறுப்பினர்களும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர்களும் வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

இதேவேளை, வாக்கெடுப்பைப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புறக்கணித்திருந்தன.

மேலும், கடந்த புதன்கிழமை எதிரணி வரிசைக்கு வந்து சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்த ஜி.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட 13 எம்.பிக்களும் இடைக்கால வரவு - செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பைப் புறக்கணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் என்ற வகையில், எதிர்வரும் நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை, அமைச்சரவை அனுமதியுடன் கடந்த ஆகஸ்ட் 30 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியிருந்தார்.

இந்நிலையில், நிதி அமைச்சரின் இடைக்கால வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் கடந்த ஆகஸ்ட் 31ஆம் திகதியிலிருந்து நேற்று வரை (செப்டெம்பர் 2ஆம் திகதி) மூன்று நாள்கள் இடம்பெற்றிருந்தன.

அதற்கமைய, இடைக்கால வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நேற்று மாலை 5.28 மணியளவில் ஆரம்பமானது.

## கோட்டாவைப் பதவியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக சாடிய இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் சுயாதீன எம்.பியுயான வாசுதேவ நாணயக்கார,வடக்கு,கிழக்கு மாகாணங்களை தனி இராஜ்ஜியமாக்கி அங்கு அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதே அவரின் அடுத்த நோக்கம் எனவும் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற இடைக்கால வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய வாசுதேவ நாணயக்கார எம்.பி. அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தலையிடுகிறார். இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட அமெரிக்கத் தூதுவருக்கு அதிகாரமில்லை. காலி முகத்திடல் போராட்டத்திற்கு அமெரிக்க தூதுவர் ஒத்துழைப்பு வழங்கினார். ஜனாதிபதியாகவிருந்த கோட்டாபாய ராஜபக்ஷவை போராட்டத்தின் ஊடா கப் பதவியிலிருந்து விரட்டினார். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற் றுள்ள நிலையில் தற்போதும் அமெரிக்கத் தூதுவர் போராட்டத்திற்கு அனுசரணை வழங்குகிறார்.

இலங்கையில் போராட்டங்களை உருவாக்கும் முயற்சியில் அமெரிக்கத் தூதுவர் ஈடுபடுகிறார். அதற்காக நிதி செலவு செய்யப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தனி இராஜ்ஜியமாக்க அமெரிக்க தூதுவர் முயற்சிப்பது தமிழ்,முஸ்லிம் மக்களுக்காக அல்ல, அது அமெரிக்கா, இலங்கையைப் பலவீனப்படுத்தி, அங்கு தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி, எம்.சி.சி.ஒப்பந்தந்தை செயற்படுத்தவே. இலங்கையை யுத்த தளமாக மாற்றியமைக்கும் தேவை அமெரிக்காவுக்கு உண்டு.எனவே அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கு நாடாளுமன்றில் எமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோம். - என்றார்.

## ஜெனிவா வியூகம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து முன்வைக்க வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்றியும், நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவும் கலந்துரையாடியுள்ளனர்.

## கோட்டாவைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்ச்சி இடம்பெற்று வருகின்றது எனவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவைப் பதவி நீக்கிவிட்டு அந்த இடத்துக்குப் கோட்டாபய ராஜபக்ஷவைப் பிரதமராக்குவதற்கு முயற்சிக்கப்பட்டு வருகின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பவுள்ளார். எனினும், அவர் மீதும், மஹிந்த, பஸில் மீதும் நாட்டு மக்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர்.

இப்படியிருக்கையில் ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக அரசியல் சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன - என்றார்.

## தொடரும் துப்பாக்கிச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளில் இருந்து நாட்டில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் தரப்பினரால் வழிநடத்தப்படுகின்றன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த மே 31ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் முதலாம் திகதி வரை 30 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களாவர் - என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622






# தேர்தலைப் பிற்போட முயற்சித்தால் அதற்கெதிராக நீதிமன்றுசெல்வோம்

## ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை



மாகாண சபை தேர்தலை கால வரையறையற்ற வகையில் பிற்போட்டுள்ளதை போன்று உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போட அரசாங்கம் முயற்சிக்க கூடாது. அவ்வாறு முயற்சித்தால் அதற்கு எதிராக நீதி மன்றம் செல்வோம்.

தேர்தலை பிற்போடுவது நாட்டின் தற்போதைய நிலைமைக்கு சாதகமாக அமையாது. மக்களின் அபி லாஷைக்கும், நாடாளுமன்றத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றமை துரதிஷ்டவசமா னது. ஆகவே உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் சபையில் தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற நாடாளு மன்றகூட்டத்தொடரின்போது சிறப்புகூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடு என்ற ரீதியில் பல நெருக்கடிகளை தற்போது எதிர்கொண்டுள்ளோம்.பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகள் தீவி ரமடைந்துள்ளன.

வரலாற்று காலத்திலிருந்து பல சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளோம். 30 வருடகால யுத்தம், சுனாமி, கொவிட் பெருந்தொற்று தாக்கம் ஆகிய சவால்களை நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ளார்கள்.

வரலாற்று காலத்தில் தோற்றம் பெற்ற சவால்களை எதிர்கொள்ளும் போது நாட்டு மக்களுக்கும் நாடாளு மன்றத்துக்குமிடையில் நல்லுறவு காணப்பட்டது.

இன்று துரதிஷ்டவசமாக நாடளுமன்றத்துக்கும், நாட்டு மக்களுக்கும் இடையிலான நல்லுறவு வெகுவா கச் சிதைவடைந்துள்ளது. மக்களின் கருத்துக்கும், நாடா ளுமன்றத்தில் குறிப்பிடப்படும் கருத்துக்கும் இடையில் பாரிய வேறுப்பாடுகள் காணப்படுகின்றன.

ஜனநாயக நாடாளுமன்றத்திற்கு இத்தன்மை பிர தான நெருக்கடியாகும்.அரசமைப்பின் 22ஆவது திருத் தத்தம் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப் பட்டு,அதன் பிரதி எமக்கு வழங்கப்பட்டுள்ளது. எதிர்கால தலைமுறையினருக்காக 22ஆவது திருத்தத்தில் பல் வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கொழும் பில் இருந்தவாறு பேச்சை முன்னெடுக்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நடுத் தர மக்களின் நாளாந்த வாழ்க்கையில் தாக்கம் செலுத் தும்.சகல பிரச்சினைகளுக்கும் நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வு காண முடியும்.

நாட்டு மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் இடை யில் பாரிய வேறுப்பாடுகள் காணப்படுமாயின் அது சாதாரணதொரு விடயமல்ல,

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தல் காலத்தில் பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார நட வடிக்கையை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழிநடத்தினார்.

தேர்தல் பிரசார மேடைகளில் குறிப்பிட்ட விடயங்க ளுக்கும், தற்போதைய செயற்பாடுகளுக்கும் இடையில் பாரிய வேறுப்பாடுகள் காணப்படுகின்றன.

தேர்தல் காலத்தில் பொதுஜன பெரமுன சிறந்த மற் றும் தெளிவான இலக்குகளை நாட்டு மக்களிடம் முன் வைத்தது. சிறந்த கொள்கைக்காகவே மக்கள் பொது ஜன பெரமுனவிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கினார்கள். தன்னிச்சையாக செயற் படுவதற்கு மக்கள் இந்த மாபெரும் பலத்தை வழங்க வில்லை.

கடந்த இரண்டரை வருட காலத்தில் இடம்பெற்ற நிகழ் வுகள் கவலைக்குரியன. மக்களின் ஆணை முழுமை யாகத் திரிவுபடுத்தப்பட்டன.

தேர்தல் பிரசார மேடையில் குறிப்பிட்டவை செயற் படுத்தப்படவில்லை.ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பு முழுமையாக இல்லா தொழிக்கப்பட்டுள்ளது.

மக்கள் ஒப்பந்தம் ஊடாகவே நாடாளுமன்ற உறுப்பி னர்கள் செயற்பட வேண்டும்.மக்களின் அபிலாஷை நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு இன்றியமையாததா கும்.

மக்களுக்கும், மக்கள் பிரநிதிகளுக்கும் இடையிலான அந்த ஒப்பந்தம் பலவீனமடையுமாயின் விளைவுகளை எவராலும் தடுக்க முடியாது. தற்போதைய நாடாளுமன் றத்துக்கும், மக்கள் ஒப்பந்தத்துக்கும் இடையில் இணக் கப்பாடற்ற தன்மை காணப்படுகிறது.

ஜனநாயக சமூகத்தின் பிரதான இலட்சினையாக தேர்தல் காணப்படுகிறது. மக்களுக்கு பயந்து தேர்தலை நடத்தாமல் இருப்பதை ஜனநாயக சமூகம் எனக் குறிப் பிட முடியாது. தற்போதைய நிர்வாகம் தற்காலிகமானது என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தற்காலிக அரசாங்கத்தின் நிறைவுடன் தேர்தலை நடத்த வேண்டும். மக்களாணை மக்கள் வசமுள்ளது.

அதனை நாடாளுமன்றத்துக்குக் கூட இல்லா தொழிக்க முடியாது. நாட்டு மக்களின் சர்வசன வாக்குரி மையை எவரும் தடுக்க முடியாது. ஒருசில தரப்பினரது குறுகிய காலத் தேவைக்காக மக்களின் உரிமையை இல்லாதொழிக்க முடியாது. தமக்கான நாடாளுமன்றத் தைத் தெரிவுசெய்யும் உரிமையை நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும்.

பொதுத்தேர்தலை நடத்த முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும். மாகாண சபைத் தேர்தலுக்கு செய்ததை போன்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கும் செய்ய முயற்சிக்க வேண்டாம் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம். வரையறையற்ற வகையில் பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்த லால் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள் ளன.

மாகாண சபை தேர்தலை பிற்போட்டுள்ளதைப் போன்று உள்ளூராட்சிமன்றத் தேர்தலையும் பிற்போட முயற்சிக்க வேண்டாம்.நாட்டின் தற்போதைய நிலைமை அதற்கு சாதகமாக அமையாது. மாகாண சபைத் தேர்த லுக்காக நீதிமன்றம் சென்றதை போன்று, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகவும் நீதிமன்றம் செல்வோம். – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# சிங்களம் கோரும் நீதி

**கலாநிதி வண.ஒமல்பே சோபித தேரர் உண்மை ஒன்றை பட்டவர்த்தனமாகத் தம்மை அறியாமல் கூறி இருக்கிறார். இவ்வளவு காலமும் தமிழர்கள் அதைக் கூறி வந்த போது அது பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் காதில் ஏறவில்லை. ஆனால் பிரச்சினை தங்களுக்கு என்று வந்ததும், அதை அவர்களே – பௌத்த சிங்களத் தலைவர்களே – கூறமுற்படுகின்றார்கள். வண.ஒமல்பே சோபித தேரர் கூறுவது இந்த வகையறா தான்.**

**நாட்டின் திருடர்களைப் பிடிக்கும் பொறுப்பை திருடர்களே ஏற்றுக்கொண்டுள்ளமையால், ஒருபோதும் திருடர்கள் பிடிக்கப்படுவது நடக்காது என ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**

**எம்பிலிப்பிட்டிய போதிராஜ தர்ம நிறுவனத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

**"நாட்டின் அரசியல்வாதிகள் திருடியவற்றைக் கண்டு பிடிக்க சர்வதேச ஆணைக்குழு நியமிக்க வேண்டும். இந்த அரசியல் கொள்ளைகளை நிறுத்துவதற்கு சர்வதேசத்தின் உதவியை பெற்றுக்கொள்ள வேண்டும்.**

**"திருடர்களைப் பிடிக்கவே மக்கள் தலைவர்களைத் தெரிவு செய்கின்றனர். எனினும் தற்போது அதிகாரத்தை பெற்றுக்கொண்டு, திருடர்களைப் பாதுகாக்கின்றனர். இவர்களில் எவர் மூலமும் தேசிய பொறுப்பு நிறைவேற்றப்பட மாட்டாது.**

**"ஆகவே, கொள்ளையிடப்பட்ட பணத்தை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வருவதே வரவு – செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையை ஈடுசெய்வதற்கான பொருத்தமான செயல்" – என ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**

**சரி. திருடர்களே திருடர்களை பிடிக்க முடியாது என்பதால் சர்வதேச ஆணை குழு கோரும் அவரும் அவரைச் சார்ந்த பௌத்த, சிங்கள பேரினவாதிகளும், யுத்தக் குற்றச்சாட்டு விடயத்தில் மட்டும் யுத்தக் குற்றம் புரிந்தவர்கள் தரப்பே அப்படிக் குற்றச்சாட்டுகள் இருந்தால் விசாரிக்கட்டும், விசாரணையில் சர்வதேச தலையீடு தேவை இல்லை என்று நியாயம் பிளப்பது எவ்வகையான நீதி?**

**இது விடயத்தில் 'எங்களுக்கு வந்தால் தக்காளிச் சட்னி, உங்களுக்கு வந்தால் மட்டும் இரத்தமா?' என்றுதான் அவர் உட்பட பௌத்த, சிங்கள பேரினவாதத்திடம் கேட்கத் தோன்றுகிறது.**

**யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் மோசமாக இழைக்கப்பட்டன, அவை குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக நீதி விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்பு கூறல் நிலை நாட்டப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீளநிகழாமை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில், தீர்மானங்களின் மேல் தீர்மானங்கள் நிறைவேற்றிக் கோருகிறது.**

**சர்வதேச நியமங்களுக்கு அமைவான விசாரணை இலங்கையின் இறைமையை மீறும் செயலெனக் கூப்பாடு போடும் தரப்பின் பிரதிநிதியான ஒமல்பே சோபித தேரர், அதன் காரணமாக தங்கள் அரசியல் பிரச்சினைக்கு – நாட்டைச் சூறையாடிய அரசியல்வாதிகளுக்கு எதிரான விசாரணைகளுக்கு – சர்வதேச விசாரணை கோருவதற்கு அடிப்படைத் தகுதியை அற்றவர் என்பதுதான் உண்மையாகும்.**

# நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்களுக்கு எதிரான நடவடிக்கை குறித்து ஜனாதிபதி குறிப்பிடாதமை ஏன்?

## அசோக அபேசிங்க கேள்வி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தில் பொருளாதார நெருக்கடிக்கான காரணிகள் தொடர்பிலும், அதற்குக் காரணமானவர்கள் தொடர்பிலும் தெரிவிக்கப்படவில்லை.

பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணமானவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் குறிப்பிடப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அவர்களுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம் அவர்களது ஆதரவின் அடிப்படையிலேயே அவர் ஜனாதிபதியாகியுள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமுர்த்தி மற்றும் ஏனைய கொடுப்பனவு அதிகரிப்பு போதுமானவையல்ல. அவை மேலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி குறிப்பிட்டமையைப் போன்று 61 ஆயிரம் குடும்பங்கள் மாத்திரம் வறுமையால் பாதிக்கப்படவில்லை. மாறாக சுமார் 51 லட்சம் குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியா கோதுமை ஏற்றுமதியை இடைநிறுத்தியுள்ளது. இந்நிலையில் எமது நாடு எவ்வாறு கோதுமையைப் பெற்றுக்கொள்ளும்? இவ்வாறு எந்த நெருக்கடிகளுக்கும் ஜனாதிபதியின் வரவு – செலவுத் திட்ட உரையில் தீர்வு இல்லை.

மாறாக, அவரது உரை அழகிய கதையாக மாத்திரமே உள்ளது. சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் கால வரையறை தொடர்பில் எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படவில்லை.

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும், இராஜாங்க அமைச்சர்கள் எண்ணிக்கை 40 ஆகவும் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு 70 அமைச்சுக்களைக் கொண்டு எவ்வாறு செயற்படுவது? கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்பதற்காகவே கோட்டா கோ கம ஆர்ப்பாட்டத்தைப் பாதுகாப்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அவரது எண்ணம் படி தற்போது அவர் ஜனாதிபதியாகியுள்ளமையால் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்துக் கொண்டிருக்கின்றார். – என்றார்.

# அதானி மற்றும் அமெரிக்க நிறுவன முதலீடுகள் கிடைக்கப்பெறுவது இலங்கைக்கு அதிஷ்டமே!

## எஸ்.பி. திஸாநாயக்க பெருமிதம்



வெளிநாட்டு முதலீடுகள் இன்றி நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. எனவே அவற்றைக் கண்டு அச்சப்பட வேண்டிய அவசியமில்லை.

அதானி மற்றும் அமெரிக்காவின் நியூ போட்டரஸ் நிறுவனங்களின் முதலீடுகள் கிடைக்கப் பெறுகின்றமை இலங்கைக்கு அதிஷ்டமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட நாடுகள் வெளிநாட்டு முதலீடுகளின் ஊடாகவே முன்னேற்றமடைந்துள்ளன.

ஆனால் இலங்கையில் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் என்பவற்றின் ஊடாக வரவிருக்கும் முதலீடுகளுக்கு எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்றன.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், இலங்கை மின்சாரசபை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் என்பவற்றை வெளிநாட்டு முதலீடுகளுடன் இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்ற வேண்டியது அவசியமாகும். அதானி நிறுவனம் உலகின் தனவந்த நிறுவனங்களில் ஒன்றாகும்.

அதே போன்று அமெரிக்காவின் நியூ போட்டரஸ் எனர்ஜி நிறுவனத்தில் இலங்கையின் பங்குதாரர்களும் உள்ளனர்.

இவர்களது முதலீடுகள் கிடைக்கப் பெறுவது எமக்கு அதிஷ்டமாகும். எனவே நாம் முதலீடுகளைக் கண்டு அச்சப்பட வேண்டியதில்லை. வெளிநாட்டு முதலீடுகள் இன்றி நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.

கொவிட் தொற்று தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் கூட ஆசியாவிற்கு 1.2 ட்ரில்லியன் முதலீடு கிடைக்கப் பெற்றது. சீனா, வியட்நாம், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த முதலீடுகள் கிடைக்கப் பெற்றன. ஆனால் இலங்கைக்கு சிறிதளவேனும் கிடைக்கப்பெறவில்லை. தற்போது சுற்றுலாத்துறை மீளப் புத்துயிர் பெற்று வருகிறது. அத்தோடு சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை எட்டுவதற்கான சாத்திப்பாடுகள் காணப்படுகின்றன.

எனவே இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் வரவு மற்றும் செலவிற்கிடையிலான இடைவெளியை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நம்புகின்றோம். – என்றார்.

# 4 முட்டைகளை 260 ரூபாவுக்கு விற்பனை செய்தவருக்கு 5 லட்சம் ரூபா அபராதம்!

கொழும்பு, செப். 03

பலாங்கொடை நகரில் 4 வெள்ளை முட்டைகளை அதிகபட்ச சில்லறை விலையை விட 260 ரூபாவுக்கு விற்பனை செய்த விற்பனையாளர் ஒருவருக்கு ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையால் கடந்த 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகும்.

அதன்படி, பலாங்கொடை நகரில் நடத்தப்பட்ட சோதனையின் போது, சந்தையில் இருந்து முட்டைகளை வாங்கி, நான்கு முட்டைகளுக்கு தலா 65 ரூபா வீதம் 260 ரூபா விற்கு விற்பனை செய்துள்ளார்.

இந்நிலையிலேயே அதிகபட்ச சில்லறை விலையை விட கூடுதல் விலைக்கு முட்டை விற்பனை செய்தமைக்காக பலாங்கொடை பதில் நீதிவான் ஏ.எம்.எஸ். மெனிகே ஐந்து லட்சம் ரூபா அபராதத் தொகையை விதித்தார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# டெல்லி - பெய்ஜிங் இணையாப் போக்கு ‘ஆசிய நூற்றாண்டு’க்குப் பின்னடைவு!

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கம்

சீனாவுடனான எல்லையின் நிலையே நமது (இந்தியாவின்) உறவின் நிலையைத் தீர்மானிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் திங்கள்கிழமை கூறினார்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் எதிர்காலத்தில் எவ்வாறு வளரும் என்பது கண்டத்தில் உள்ள பிளவுகளை நிர்வகிப்பதற்கு சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் விதிகளுக்கு இணங்குவது முக்கியமானதாக இருக்கும், ஆசியாவின் எதிர்காலத்தின் பெரும்பகுதி அதைப் பொறுத்தது என்றும் அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்

இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு மதிக்கப்பட வேண்டும் என்றும், பிராந்தியத்தை பாதிக்கும் முயற்சிகளில் விடயங்கள் ஆலோசனை அடிப்படையில் கையாளப்பட வேண்டுமேயொழிய ஒரு தலைப்பட்சமாக அல்ல என்றும் ஜெய்சங்கர் கூறினார்.

இரு தரப்புக் இணைப்புச் செயற்பாடு என்பது குறிப்பாக, வெளிப்படையானதாகவும், சாத்தியமானதாகவும், சந்தை அடிப்படையிலானதாகவும் இருக்க வேண்டும் என, ‘ஆசியா சொசைட்டி பொலிசி இன்ஸ்டிடியூட்’ வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் கூறினார்.

“அதேபோல், வளர்ச்சி நிகழ்ச்சி நிரல்களும் பரந்த அடிப்படையிலும், தனிப்பட்ட தேசிய நோக்கங்களைக் காட்டிலும் உலகளாவிய ஒருமித்த கருத்தை பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும்.அப்படி அமைவது உலகளாவிய பொது மக்களின் நல்வாழ்வுக்கு பங்களிப்பதுடன் உலகளாவிய பொருள்களை வழங்குவதும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். உடன்படிக்கைகள் மற்றும் தீர்ப்புகள் கவனமாக கடைபிடிக்கப்பட வேண்டும், தத்தமது வசதிக்கான வியங்களாக அவவை கருதப்படக் கூடாது, என்று அவர் கூறினார்.

இந்தியாவும் சீனாவும் ஒன்று சேராதது ‘ஆசிய நூற்றாண்டை’ பின்னடைவுக்குள்ளாக்கும் என்றும் ஜெய்சங்கர் கூறினார்.

ஆசிய நூற்றாண்டிற்கு இந்தியாவும் சீனாவும் ஒன்று சேர்வதே முன் தேவை என்று கூறப்படுகிறது. மாறாக, இவ்விவகாரத்தில் அவர்களின் இயலாமை அதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று அமைச்சர் கூறினார்.

உறவுகள் நேர்மறையான பாதையில் திரும்பி, நிலையானதாகவும் இருக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திய அவர், பரஸ்பர உணர்வு பூர்வ தன்மை, பரஸ்பர மரியாதை மற்றும் பரஸ்பர நலன் ஆகிய மூன்று பரஸ்பரங்களின் அடிப்படையில் அவை இருக்க



வேண்டும் என்றும் சுட்டிக் காட்டினார்.

ஒரு குறுகிய ஆசிய பேரினவாதம் உண்மையில் கண்டத்தின் சொந்த நலனுக்கு எதிரானது என்றும், துல்லியமாக ஆசியா மிகவும் ஆற்றல் மிக்கதாகவும் ஆக்கப்பூர்வமானதாகவும் இருப்பதால், அது மற்ற பிராந்தியங்களின் திறந்த கதவுகளிலிருந்து பயனடைய விரும்புகிறது என்றும் ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

அது வெளிப்படையாக, ஒரு வழி பாதையாக இருக்க முடியாது என்று அவர் கூறினார்.

**(மூலம்: ‘ரைம்ஸ் ஒவ் இண்டியா’)**

## விமானம் தாங்கிப் போர்க் கப்பலான

# ஐ.என்.எஸ். விக்ராந்த்தை நேற்று நாட்டுக்கு அர்ப்பணித்தார் மோடி




கொச்சி, செப்.02

கேரளா மாநிலம் கொச்சியில் நாட்டின் முதல் உள்நாட்டுத் தயாரிப்பு விமானம் தாங்கிக் போர்க்கப்பலான ஐ.என்.எஸ். விக்ராந்த்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார் பிரதமர் மோடி .

கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் மோடி ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து இந்தியக் கடற்படைக்குப் புதிய கொடியை அறிமுகம் செய்து வைத்தார் பிரதமர் மோடி.

இந்துயக் கடற்படைக்காக, ஐ.என்.எஸ்., விக்ராந்த் என்ற பிரமாண்ட விமானம் தாங்கி போர் கப்பல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது.

இந்திய கடற்படைக்கு சொந்தமான, ‘வோர்ஷிப் டிசைன் பீரோ’ என்ற நிறுவனம் இந்த கப்பலை வடிவமைத்தது. கேரளாவின் கொச்சியில் உள்ள அரசு பொதுத்துறை நிறுவனமான, ‘கொச்சி ஷிப்யார்ட் லிமிடெட்’ இந்த கப்பலை உருவாக்கியது. முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களால் இந்த கப்பல் உருவாக்கப்பட்டது.

முன்னணி தொழில் நிறுவனங்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் உபகரணங்களை தயாரித்து தந்துள்ளன.

மொத்தம், 20 ஆயிரம் கோடி (இந்திய) ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கப்பல், 860 அடி நீளமும், 203 அடி அகலமும் உடையது. 4.30 கோடி கிலோ எடையை சுமக்கும் திறன் உடையது. மணிக்கு 56 கி.மீ., வேகத்தில் பயணிக்கக் கூடியது. 2,200 பிரிவுகளுடன், 1,600 வீரர்கள் பயணிக்க கூடிய இந்த கப்பல், பெண் வீராங்கனையருக்கான பிரத்யேக வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில், உயர்தர மருத்துவமனையில் இருக்கக் கூடிய அத்தனை வசதிகளும் இடம்பெற்று உள்ளன. சமீபத்திய நவீன மருத்துவ உபகரணங்கள், ‘பிசியோதெரபி’ பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, பரிசோதனை கூடங்கள் ஆகியவை உள்ளன.

இந்தக் கப்பலில், ‘மிக்29கே’ ரக போர் விமானங்கள், ‘கமோவ் 31, எம்.எச்.,60ஆர்’ ரக ஹெலிக் கொப்டர்கள், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன இலகுரக ஹெலிகாப்டர்கள், இலகுரக விமானங்கள் உட்பட, 30க்கும் மேற்பட்ட விமானங்களை இயக்கும் வசதி உள்ளது. இந்த கப்பலில் மிக குறுகிய தூரத்தில் விமானம் மேல் எழுப்பி செல்லும் நவீன, ‘ஸ்டோபார்’ தொழில்நுட்பம் இடம்பெற்றுள்ளது. இந்த கப்பலை உருவாக்கியதன் வாயிலாக, உள்நாட்டில் விமானம் தாங்கி போர் கப்பலை வடிவமைத்து உருவாக்குவதற்கான திறனை உடைய அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, சீனா, பிரான்ஸ் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளின் குழுவில் இந்தியாவும் இணைந்துள்ளது.

ஐ.என்.எஸ் விக்ராந்த் போர்க்கப்பல் எத்தகைய







சவாலையும் சமாளிக்கும் திறன் கொண்டது என்று பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த புதிய



போர்க்கப்பல் தற்போதுள்ள கப்பல்களை விட 7 மடங்கு பெரியதாகும். விக்ராந்த் போர்க்கப்பலை நாட்டுக்கு அர்ப்பணித்து பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:–

உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் இவ்வளவு பெரிய விமானம் தாங்கி கப்பல்களை உருவாக்கும் நாடுகளில் இந்தியாவும் இணைந்துள்ளது. இன்று, விக்ராந்த் போர்க்கப்பல் இந்தியாவை புதிய நம்பிக்கையால் நிரப்பியுள்ளது. விக்ராந்த் போர்க்கப்பல் பெரியது மற்றும் பிரமாண்டமானது, விக்ராந்த் தனித்துவமானது, விக்ராந்த் வெறும் போர்க்கப்பல் அல்ல, 21 ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் கடின உழைப்பு, திறமை, தாக்கம் மற்றும் அர்ப்பணிப்பு. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில், இந்திய கடற்படை, அனைத்து பொறியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் கொச்சி கப்பல் கட்டும் தொழிலாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமையான தருணம் இது. உள்நாட்டு உற்பத்தியான விமானந்தாங்கி ஐ.என்.எஸ். விக்ராந்த் போர்க்கப்பல் நகரும் நகரம். விக்ராந்த் போர்க்கப்பல் எத்தகைய சவாலையும் சமாளிக்கும் திறன் கொண்டது. வளர்ச்சி நாடுகள் கூட்டமைப்பில் இந்தியாவும் இணைந்துள்ளது. – இவ்வாறு அவர் பேசினார்.

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.


# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** நல்லூர்த் திருவிழாவுக்குப் போனதாக எழுதியிருந்தீர்கள். புதிய எஜமானரின் பரிபாலனம் எப்படி இருந்தது?

**பதில்:-** உணவூட்டும் காலத்திலிருந்தே, பறவைகள் தம் குஞ்சுகளுக்கு மெல்ல மெல்ல பறக்கவும் சொல்லிக் கொடுத்துவிடுகின்றன. அதனால் பருவம் வந்தபிறகு அக் குஞ்சுகள் தாய் போலவே தாமும் பறக்கத் தொடங்கி விடும். நல்லூர் விடயத்திலும் அதுதான் நடந்தது. நான் சிறுவனாக இருந்தபொழுது தீர்த்தத்தன்று கேணியின் முகப்பில் பழைய எஜமான் குமாரதாஸ மாப்பாணமுதலியாரும் அவரது துணைவியும் தற்போதைய புதிய எஜமானை சிறு பாலகனாகக் கையில் ஏந்திக் கொண்டு நின்றது ஞாபகத்தில் இருக்கிறது. அப்போதே அப் பாலகன் தெய்வத்தன்மையோடு ஒளிவீசி நின்றான்.

கம்பன் கழகம் தொடங்கிய பிறகு அவர்கள் குடும்பத்துடனான தொடர்பில் நெருக்கம் ஏற்பட்டது. பழைய எஜமானின் நிர்வாகஇறுக்கம் பற்றி அனைவரும் அறிவார்கள். அத்தகையவர், தனது அந்த இறுக்கத்தைத் தளர்த்தி எங்களுக்கென்று தனித்த சில சலுகைகள் வழங்கினார். மாநகரசபையின் முன்னாள் ஆணையாளரின் தொடர்பால், ‘கம்பன் கோட்டம்’ அமைக்கக்



காணி ஒன்றைத் தந்தமை, நல்லூர் வீதியில் பந்தலிட்டுக் கம்பன் விழாக்களை நடத்த அனுமதி தந்தமை என அச் சலுகைகள் விரிந்தன.

எனது பாட்டனார் நல்லூரானின் நெடுங்கால பக்தர். அவர் மறைந்து பலகாலம் ஆயிற்று. ஆனாலும் என்னைக் காணும் போதெல்லாம் அவரின் பெயர் சொல்லி, எங்கள் குடும்பத்தாரை விசாரிப்பார். மிக மென்மையாக இருந்த அவரது நிர்வாகத்தின் திண்மை கண்டு வியந்திருக்கிறேன்.

எங்களுக்குக் கம்பன் கோட்டம் அமைக்கக் குத்தகைக்குக் காணி தந்தார் என்று சொன்னேன் அல்லவா? பின்னர் அங்கு நாங்கள் அமைத்த கட்டிடத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்தன. யார் யாரோ வந்து போனார்கள். ஆனால் கடைசிவரை காணி தந்த எஜமான் எங்கள் கட்டிடத்திற்குள் காலைக் கூட வைக்கவில்லை. அதுதான் அவரது பெருந்தன்மை.

அவர் இருந்த காலத்திலேயே, இன்றைய புதிய எஜமான் ‘சயந்தன் மாப்பாணமுதலியாரோடு’ தொடர்பு உண்டாயிற்று. கொழும்பில் எமது கழகம் அமைத்த ஆலயத்தின் வடிவமைப்பை அவர்தான் எமக்கு அமைத்துத் தந்தார். ஆலயம் பற்றிய என் மனதிலிருந்த திட்டத்தைச் சொல்லிப் பல கட்டிடக் கலைஞர்களை அணுகினேன். எத்தனையோதரம் முயன்றும் எவரது ஆக்கங்களும் எனக்குத் திருப்தி தரவில்லை. ஆனால் சயந்தன் எனது எண்ணத்தை உள்வாங்கி ஒரே தரத்தில் சரியான வடிவமைப்பை அமைத்துத் தந்தார். அந்தப் பணிக்காக, எங்களிடம் அவர் ஒரு சதம்கூட கட்டணமாகப் பெற்றுக்கொள்ளவில்லை. அதுமட்டுமல்லாமல் நாங்கள் அந்தக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டியபோது, தனியே வந்து தன்னைக் காட்டிக் கொள்ளாமல் அத்திவாரத்தில் ஓர் பணப் பொட்டலத்தை வைத்து வணங்கிச் சென்றார். அதுமட்டுமல்லாமல் கம்பன்கோட்டத்திற்கே வராத தந்தையாரை எங்கள் கோயிலுக்கு அழைத்து வந்து எங்களை மகிழ்வித்தார்.

அதன் பிறகு எங்கள் கோயிலிலும் பல நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. ஆனால் சயந்தனும் தந்தையைப் போலவே எதிலும் கலந்து கொள்ளாமல் தனித்துவம் பேணியே வருகிறார். ஒருமுறை நல்லூர் உற்சவத்தின் போது, எமது கம்பன்கோட்ட மேல்மாடி மண்டபத்தில் இசை அரங்கம் ஒன்றினை நடத்தினோம். அதில் நிறைவுநாளன்று மிக முக்கியமான ஒரு இசை நிகழ்ச்சி நடந்தது. அன்று ரசிகர்களால் மண்டபம் நிறைந்து வழிந்தது. அளவுக்கதிகமான கூட்டம் வந்துவிட்டபடியால் கொஞ்சப்பேரை வெளியில் தள்ளிக் கேற்றை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வேலையை எங்களது செயலாளர் குமாரதாசன் செய்தார். தற்செயலாய் நான் மேலிருந்து எட்டிப் பார்த்தபொழுது வெளியில் தள்ளப்பட்ட ஒருவராய் சயந்தனும் நின்று கொண்டிருப்பதைக் கண்டு பதறிப்போனேன். அதுபற்றி எந்தவித எதிர் உணர்வும் இல்;லாமல் அவர் நின்றதைக் கண்டு வியந்தேன். அதுதான் அவர்களது குடும்பப்பண்பு. மற்றவர்களோடு பழகும் போது பஞ்சு போல் மென்மையாக இருப்பார்கள். நிர்வாகம் என்று வந்துவிட்டால், இரும்புபோல் இறுகிவிடுவார்கள்.

இதுவரை சொன்னவை வெறும் முன்னுரைதான். இனி, உங்கள் கேள்விக்கு வருகிறேன். நல்லூர் நிர்வாகத்தை நடத்துவது என்பது சாதாரண காரியம் அல்ல. அது மிகப்பெரிய காரியம். முத்திரை பதித்துவிட்;ட ஒரு சிறந்த நிர்வாகத்தைப் புதிதாய்ப் பொறுப்பேற்பவருக்கு, பல சிரமங்கள் இருக்கின்றன. ஏற்கனவே இருந்த நிர்வாக அச்சில் ஒரே மாதிரி ஓடவும் கூடாது. அதே நேரத்தில் அந்த அச்சிலிருந்து முற்றாக விலகிவிடவும் கூடாது. நூலில் நடக்கிற வேலை அது.

புதிய எஜமான் தந்தையார் தந்த பயிற்சியாலும், தனது சுய ஆளுமையாலும், வெகு சாதாரணமாக நூலில் நடந்து காட்டியிருக்கிறார். பழைய மரபின் தரம் மாறாமால், புதிய விடயங்கள் சிலவற்றையும், பொறுப்பேற்ற முதல் வருடத்;திலேயே உட்புகுத்திக் ‘கலக்கி’ விட்டார். நல்லூர்த் திருவிழாவை நடத்துவது என்பது மலையைப் பெயர்க்கின்ற வேலை. ஒரு சிறிய ஆலயத்தின் ஒரு சிறிய திருவிழாவை நடத்துவதால் வந்த அனுபவத்தை வைத்தே இதைச் சொல்கிறேன்.

இலட்சக்கணக்கான மக்கள் கூடும் நல்லூர்த் திருவிழாவை சும்மா நடத்துவதே பெரிய காரியம். அதனை, மற்ற ஆலயங்கள் நினைத்தும் பார்க்க முடியாத சிறப்போடும், நேரக் கட்டுப்பாட்டோடும் நடத்துவதென்பது நினைத்தும் பார்க்க முடியாத விடயம். தந்தை இல்லாத குறை துளியளவேனும் தெரியாது திருவிழாவை நடத்தி முடித்த, புதிய எஜமான் சயந்தன் மாப்பாணமுதலியாருக்கு எத்தனை தரம் வேண்டுமானாலும் பாராட்டுரைக்கலாம். புதியவரது நிர்வாகத்தில் பாராட்டுக்குரிய விடயங்கள் பலவாய்க் குவிந்து கிடந் தன. ஒரு சில குறைகளும் இல்லாமலில்லை. புறந்தள்ளக் கூடிய அவற்றை விட்டுவிடுவோம்.

முக்கியமான ஒரு விடயத்தை மட்டும் புதிய எஜமானர் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. இது ‘அட்வைஸ்’ அல்ல வேண்டுகோள். நல்லூரின் மொத்த அடியார்களின் உணர்வுகளை உள்வாங்கியே இவ் வேண்டுகோள் இங்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வேண்டுகோள் ஏற்கப்பட்டாலும் ஏற்கப்படாவிட்டாலும் நான் பாதிக்கப்படமாட்டேன் என்பதை முன்னரே சொல்லிவிடுகிறேன்.

பழைய எஜமானின் செயற்பாட்டில் நான் ஒரு விடயத்தைக் கண்டு வியந்திருக்கிறேன். வழக்கமாக, ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள், ஆலயத்திற்காய் இருக்கின்ற காணி முழுவதும், கட்டிடங்களைக்கட்டி நிரப்பி மகிழ்வார்கள். குமாரதாஸ மாப்பாணமுதலியார் மட்டும் அதற்கு நேரெதிராகச் செயற்பட்டார். ஆலயத்தைச் சுற்றியிருந்த கட்டிடங்களையெல்லாம் உடைப்பித்து நிறைய வெளிகளை உண்டாக்கினார். வெளி என்பது பஞ்சபூதங்களில் உயர்ந்ததாய்க் கருதப்படும் ஆகாயபூதம். அதில் கடவுள்த் தன்மை இருக்கிறது. அதனால்த்தான் இறைவனோடு கலந்த மாணிக்கவாசகர் பற்றிச் சொல்லும் போது,’வள்ளலார்’ வான் கலந்த மாணிக்கவாசக! என்றார்.

இதுநாள் வரை திறந்து விரிந்து கிடந்த வீதியால் நல்லூர் ஆலயம் தெய்வத்தன்மை பெற்றிருந்தது. ஆனால் கடந்த சிலகாலங்களாக நல்லூர் வெளிவீதியில் பல தடைகள் போடப்பட்டுள்ளன. எங்கு பார்த்தாலும் கம்பி வேலிகள். அடியார்கள் சுற்றிவர முடியாதபடி வெளிவீதி, ஏனோ அடைக்கப்பட்டு விட்டது. முருகனின் ஆலயவாசலுக்கு நேரே செல்ல முடியவில்லை. எங்கோ ஒரு மூலையினூடு நுழைந்துதான் தற்போது நல்லூர்வாசலை அடையவேண்டிஇருக்கிறது. இதனால் எல்லா அடியார்களும் வருந்துவதோடு, ஆலயத்தின் தெய்வத்தன்மையும் குன்றிவிட்டது.

ஒருமுறை ஆலய உற்சவம் முடிந்து நடை சாத்திய பிறகு, ஒரு தாய் தன் குழந்தையைக் காணவில்லை என்று தேடி வந்தாராம். அச்சிறு குழந்தை கேணிக்குள் விழுந்திருக்கலாம் என்று அச்சப்பட்ட சயந்தன், இரவு முழுவதும் தூங்காமல் முருகனை வேண்டியபடி இருந்த கதையை, சயந்தனின் தாயார் ஒருமுறை என்னிடம் சொன்னார். வெளியிலிருக்கும் எங்களை விட ஆலயத்திற்கு வரும் அடியார்கள் பற்றி அதிக அக்கறை கொண்டவர் புதிய எஜமான் என்பதற்காய் இச்சம்பவத்தைச் சொன்னேன்.

ஏதேனும் காரணம் இல்லாமல், மேற் சொன்ன காரியத்தை நிர்வாகம் செய்திராது என்பதை உணர முடிகிறது .ஆனால் அது என்ன காரணமாய் இருந்தாலும் பழைய நிலைக்கு வீதிகளைத் திறந்து, முருகனை வெளிக்குள் அமர்த்தி, அடியார்களைச் சுதந்திரமாய் வழிபடச் செய்வதுதான் நல்லது என்பது பலரதும் கருத்தாய் இருக்கிறது. புதியன புகுத்த விரும்பும் புதிய எஜமானார் கருத்திற்கு இவ் எண்ணத்தைச் சமர்ப்பிக்கிறேன். நல்லூர் எஜமானர்கள் முருகனைக் கேட்டுத்தான் எக்காரியத்தையும் செய்வார்கள் என்று சொல்வார்கள். வேண்டுமானால் இந்த விடயத்திலும் சயந்தன் முருகனை மீண்டும் ஒருதரம் கேட்டுப் பார்ப்பது நல்லது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘காற்றுகென்ன வேலி கடலுக்கென்ன மூடி’**

**2. கேள்வி:-** என்ன? அடிக்கடி ‘ரணிலை’ப் பாராட்டுகிறீர்கள். நீங்களும் பந்தம் பிடிக்கப் பழகிவிட்டீர்களா?

(09ஆம் பக்கம் பார்க்க)



# திறைச்சேரியில் பதவிகளிலுள்ளோர் மாதச் சம்பளத்தை வெளிப்பபடுத்தினால் வீதியில் இறங்கிச் செல்ல முடியாது!

## மஹிந்தானந்த தெரிவிப்பு



தேசிய இறைவரி திணைக்களம்,மதுவரி திணைக்களம் மற்றும் சுங்க திணைக்களம் ஆகியவற்றின் வருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்தால் நாட்டின் நிதி நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியும்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள், தனியார் வகுப்பு ஆசிரியர்களில் எத்தனை பேர் வருடாந்த வரி செலுத்துகிறார்கள்.

மத்திய வங்கி, திறைச்சேரியின் முக்கிய பதவிகளில் உள்ளோர் பெறும் மாத சம்பளத்தை வெளிப்படுத்தினால் அவர்களுக்கு வீதியில் இறங்கி செல்ல முடியாத நிலை ஏற்படும் என முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவு திட்டத்தின் மீதான முதல் நாள் விவாதத்தின் பேரது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் ஜனாதிபதி திருத்தப்பட்ட இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளார். தற்போதைய தீர்மானமிக்க நிலையில் 225 உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை எதிர்பார்க்கிறேன்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் அரச வருமானம் 2054 பில்லியன்,அரச செலவு 4400 பில்லியன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச வருமானத்துக்கும், அரச செலவிற்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகிறது. வரி அதிகரிப்பு தவறானது, நிவாரணம் வழங்க வேண்டும் என பல்வேறு விடயங்களை எதிர்தரப்பினர் தற்போது குறிப்பிடுகிறார்கள்.

அபிவிருத்தி,நிவாரனம் மற்றும் தொழில் வழங்கல் தொடர்பில் குறிப்பிடுபவர்கள் அதற்கான நிதி எப்படி திரட்டிக் கொள்ளப்படுகிறது என்பது தொடர்பாகக் கவனம் செலுத்தவில்லை. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின் சகல தரப்பினரும் இனியாவது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நட்டமடையும் அரச நிறுவனங்கள் தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். கடந்த 2021 ஆம் ஆண்டு மாத்திரம் இலங்கை மின்சார சபை 99 பில்லியனையும்;, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 84 பில்லியனையும், ஸ்ரீ லங்கன் விமான சேவைகள் நிறுவனம் 143 பில்லியனையும், ரயில் திணைக்களம் 45 பில்லியனையும், நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை 3.2 பில்லியனையும் நட்டமாக எதிர்கொண்டுள்ளன.

பிரதான அரச நிறுவனங்கள் ஐந்தும் ஒரு வருடத்துக்கு மாத்திரம் சுமார் 324 பில்லியன் நட்டத்தை எதிர்கொள்ளும் போது எவ்வாறு அரச நிர்வாகத்தை முன்னெடுத்து செல்ல முடியும்.ஆகவே இந்த நிறுவனங்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்த வேண்டும்.

அரச வருமானம் தொடர்பில் அமைச்சரவை அமைச்சை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். தேசிய இறைவரி திணைக்களம், மதுவரி திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களம் ஆகியவற்றை முறையாக முகாமைத்துவம் செய்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது அவசியமற்றதாகும். எமது நாட்டில் உள்ள அரச வருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்தால் பல பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண முடியும்.

நாட்டில் நான்கு பிரதான அரிசி ஆலை உரிமையாளர்கள் உள்ளார்கள். இவர்கள் ஒரு போகத்துக்கு மாத்திரம் சுமார் 500 கோடி வருமானத்தை பெறுகிறார்கள், ஆனால் வருடத்துக்கு 9 லட்சம் மாத்திரம் தான் வரி செலுத்துகிறார்கள். தேசிய இறைவரி திணைக்களம் என்ன செய்கிறது. இந்த விடயம் தொடர்பாக ஏன் அவதானம் செலுத்தவில்லை.

மறுபுறம் மதுபான விற்பனைக்கான அனுமதி பத்திரம் 5 ஆயிரத்துக்கும் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு மதுபான நிலையம் ஒரு நாளைக்கு 50 ஆயிரம் ரூபா முதல் 75 ஆயிரம் ரூபா வரை வருமானம் பெற்றுக்கொள்ளும் போது வருடாந்தம் அவர்கள் இரண்டரை லட்சம் தான் வரி செலுத்துகிறார்கள்.

நாடு தழுவிய ரீதியில் 1800 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளன. ஓர் எரிபொருள் நிரப்பு உரிமையாளர் ஒரு நாளைக்கு 50 ஆயிரத்துக்கும் அதிகமான வருமானம் பெறும் போது அவர் வருடத்திற்கு 75 ஆயிரம் ரூபா வரி செலுத்துகிறார். இது எந்தளவிற்கு நியாயமானது. 225 உறுப்பினர்களை மாத்திரம் விமர்சிப்பது முறையற்றதாகும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரப்பிரசாதங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படுகிறது.

ஜனநாயகத்துக்காக வீதிக்கிறங்கிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் எத்தனை பேர் வருடாந்த வரி செலுத்துகிறார்கள். தனியார் வகுப்பு ஆசிரியர்களில் ஒருசிலர் ஒரு நாளைக்கு லட்சத்துக்கும் அதிகமான வருமானத்தைப் பெறுகிறார்கள். இவர்களில் எத்தனை பேர் வருடாந்த வரி செலுத்துகிறார்கள். அனைவரும் முறையாக வரி செலுத்தினால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை. சுங்கத் திணைக்களத்தில் முறையற்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. சுங்கத் திணைக்களம் முறையாக முகாமைத்துவம் செய்யப்பட்டால் அதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ளலாம்.

மத்திய வங்கியில் 15 பிரதி பொது முகாமையாளர்கள் உள்ளனர்.இவர்களுக்கு ஒரு கோடியே 60 லட்சம் ரூபா கணக்கில் அதி சொகுசு மோட்டார் கார் வழங்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி, திறைச்சேரி ஆகியவற்றில் உள்ளவர்களின் மாத சம்பளத்தைக் குறிப்பிட்டால் அவர்களுக்கு வீதியில் இறங்கி செல்ல முடியாத நிலை ஏற்படும். அதனால் கூறவில்லை.20 லட்சம் முதல் 40 லட்சம் வரை ஒவ்வொரு நிறுவனங்களும் வெவ்வேறாகச் செலுத்துகின்றன.

அரச வருமானத்தை முறையாக முகாமைத்துவம் செய்ய 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

# இடைக்கால வரவு – செலவு மூலம் பிரச்சினைகளை தீர்க்காவிட்டாலும் செலவினங்களைக் குறைக்கலாம்!

## அமைச்சர் சுசில் கருத்து

கொழும்பு, செப். 03

இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் நான்கு மாதங்களுக்குள் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண முடியாது என்றாலும் செலவினங்களைக் குறைப்பதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மீதான முதலாவது நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக வற் வரி அதிகரிப்பு தொடர்பாக மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது என எதிர்க்கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் வரிக் குறைப்பு இடம் பெற்றதாலேயே அரச வருமானம் குறைந்ததாக குற்றஞ்சாட்டியவர்கள், இப்போது இந்த வரி அதிகரிப்பை எதிர்க்கப் போகின்றார்களா?.

இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக ஒரு விடயம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது வற் வரியை 12 இல் இருந்து 15 வீதமாக அதிகரிப்பதே அந்த விடயம்.

கடந்த காலங்களில் வற் வரியைக் குறைத்தமையாலேயே 60 கோடி ரூபா வருமானம் குறைந்ததாக கூறியவர்கள் இப்போது வரி அதிகரிப்பு தொடர்பாக என்ன கூறப் போகின்றார்கள்.

நிவாரணங்கள் வழங்குவது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வரிகள் ஊடாகவே நிவாரணங்கள் வழக்கப்படும். இதேவேளை கடன், செலவு முகாமைத்துவம் தொடர்பிலும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த வரவு – செலவுத் திட்டத்தில் 4 மாதங்களில் அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க முடியாவிட்டாலும், செலவுகளைக் கட்டுப்படுத்த முடியுமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கின்றோம். முகாமைத்துவம் செய்து முன்னோக்கிப் பயணிக்க முடியும்.

நாடாளுமன்றத்தில் தற்போது நடக்கும் விவாதம் இடைக்கால வரவு – செலவுத் திட்டம் சம்பந்தமானதே. இது 2021 இன் 30 ஆம் இலக்க நிதி ஒதுக்கீட்டு சட்டத்தின் திருத்தமே.

அவ்வாறின்றி ஒரு வருடத்துக்காக சமர்ப்பிக்கப்படும் வரவு – செலவுத் திட்டம் அல்ல என்பதை எதிர்க் கட்சியினர் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று சூழ்நிலை தொடர்ந்ததன் காரணமாகவும் சமூக அரசியல்,நெருக்கடி நிலைமை காரணமாகவும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

வெளிநாட்டு அந்நிய செலாவணி குறைவடைந்து ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டது. இத்தகைய சூழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தை நான்கு மாதங்களுக்கு முகாமைத்துவப்படுத்திக் கொள்ளமுடியும்.

மேலும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஜெனிவா தொடர்பில் சபையில் தெரிவித்தார். அவர் வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த போது இரண்டு தடவைகள் ஜெனிவா யோசனை தோற்கடிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை யார் கொண்டு வந்தது? ஜே .ஆர். ஜெயவர்தனவின் அரசாங்க காலத்திலேயே கொண்டுவரப்பட்டது.

வடக்கின் நிலைமையை கட்டுப்படுத்துவதற்காகவே அந்த சட்டம் கொண்டுவரப்பட்டது. பயங்கரவாதிகளாக செயற்பட்டவர்களை கட்டுப்படுத்துவதற்காகவே அது கொண்டு வரப்பட்டது. – என்றார்.

# அரசாங்க தரப்பிற்குள் தொடரும் ஊழல்கள்!

## பொன்சேகா குற்றச்சாட்டு



அரசாங்க தரப்பிற்குள் இன்னமும் ஊழல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

1.4 பில்லியன் அமெரிக்க டொலருக்கு நிலக்கரி கொள்முதல் செய்வதற்கான அனுமதி விலை மனுக் கோரல் நடைமுறைகளை மீறி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் தரம் குறைவாக இருப்பதாகவும், அதில் ஊழல் நடந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் சங்கிலி அபகரிப்பு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, போராட்டக்காரர்களைக் கையாளும் சூழலில் ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். – என்று தெரிவித்துள்ளார்.

# ஆங்கிலத்தில் கையொப்பமிட்ட ஜனாதிபதி தற்போது சிங்களத்தில் ஒப்பமிடுகின்றார்!

## அவரின் மனநிலை மாற்றத்தை இது காட்டுகிறது என்கிறார் சுமந்திரன்



ஆங்கிலத்தில் கையெழுத்திட்டுவந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது சிங்களத்தில் கையெழுத்திடுவதன் மூலம் அவரின் நிலைப்பாடுகளும் மாறி வருகின்றமை தெளிவாகின்றது. நாட்டில் தீவிரமடைந்துள்ள துப்பாக்கி பிரயோகங்களைத் தடுக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மாறாக மக்கள் போராட்டத்தை முடக்க ஆயிரக்கணக்கில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எனக்கு முன்னதாக பேசிய அமைச்சர் யாழ்ப்பாண பிரதேசத்தில் வெங்காய உற்பத்தியைப் பற்றிக்கூறினார். அவர்களுக்கு மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டும் என்றார்.

ஆனால் இன்றைக்கு இரண்டு மாதங்களுக்கு மேலாக அந்த மக்கள் மண்ணெண்ணெய் இல்லாது பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். விவசாயிகள் நீரிறைக்கும் இயந்திரத்துக்கும் மீனவர்கள் கடலுக்கு செல்வதற்கு தங்களது படகு இயந்திரங்களுக்கும் மண்ணெண்ணெய் இல்லாது அவஸ்தைப்படுகின்றனர்.

இந்த விடயத்தை எவ்வளவு தடவை எடுத்துக்கூறியும் அதற்கு எந்த விதமான பதிலும் கிடைக்க வில்லை. கிடைத்த ஒரேயொரு பதில் 87 ரூபாவாக இருந்த மண்ணெண்ணெய் 340 ரூபாவாக 253 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அறிவிப்பு மட்டுமே வந்ததே தவிர மண்ணெண்ணெய் கிடைக்கப்பெறவில்லை.

கஷ்டப்படுகின்ற விவசாயிக்கும் கடற்தொழிலாளிக்கும் இதுவரைக்கும் எந்த நிவாரணமும் கொடுக்கப்படவில்லை. இந்த இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் கூட மண்ணெண்ணெய் பாவிப்பவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமென்ற முன்மொழிவு இருக்கின்றது. ஆனால் ஒதுக்கீட்டில் இந்த நிவாரணத்துக்காக ஒரு சதம் கூட ஒதுக்கப்படவில்லை.

இது மத்தியவர்க்கம் மற்றும் அதற்கு மேற்பட்ட வர்க்கத்தை அமைதியாக்கும் அரசின் நோக்கத்தையே காட்டுகின்றது. மத்தியவர்க்கத்தின் கீழ் உள்ளவர்களையே அரசு பார்க்க வேண்டும். ஆனால் இங்கு மத்தியவர்க்கம் மற்றும் அதற்கு மேற்பட்ட வர்க்கத்தை அமைதியாக்கி சமாளிக்க அரசு முற்பட்டுள்ளது.

அண்மைய நாள்களாகத் துப்பாக்கி சூட்டு மரணங்கள் அதிகரித்துள்ளன. அந்த மரணங்களை தடுக்கவோ சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யவோ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆனால் மக்களின் மாணவர்களின் போராட்டங்களை அடக்கவே பொலிஸ் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு இடத்தில் 500 பேர் ஆர்ப்பாட்டம் செய்தால் அங்கு 1,000 பொலிஸார் நிற்கின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க வழக்கமாக ஆங்கிலத்தில்தான் கையெழுத்திடுவார் ஆனால் அவர் ஜனாதிபதியானதன் பின்னர் 3 தடுப்புக் காவல் சட்ட ஆவணங்களிலும் சிங்களத்தில்தான் கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம் அவரின் மன நிலை மாறி வருவதைக் காண முடிகின்றது. – என்றார்.

# பாட்டும் நானே? .......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதில்:- என்னைத் தெரிந்தவர்களுக்கு நான் அப்படிச் செய்யமாட்டேன் என்பது தெரியும். ரணிலைப் பாராட்டி எனக்கு என்ன ஆகப்போகிறது? நாட்டின் நிலைமை தெரியாமல் பலரும் நடந்து கொண்டிருக்கிறார்கள். கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு, கையில் கிடைக்கும் ஒரு குச்சியும் பெறுமதி உள்ளதாய்த்தான் தெரியும். நம்மவரில் பலர் ‘அவர் சரியில்லை, இவர் சரியில்லை’ என்று விமர்சிப்பதிலேயே காலம் கழிக்கிறார்கள். ‘எவர் சரி’ என்று சொல்ல அவர்களுக்குத் தெரியவில்லை. நிர்வாகத்தைச் சீர் செய்ய முயலாமல் இருந்துகொண்டு நாம் கழிக்கும் ஒவ்வொரு நாளும் நம் இலங்கைத்தாயை அழிவு நோக்கி நகர்த்தும்; நாட்களாகத்தான் இருக்கும்.

சரி, பிழைகளை ஒருபக்கம் வைத்துவிட்டு ஆராய்ந்து பார்த்தால், இன்றைய நிலையில் நாட்டின் தலைமைக்கு ரணிலின் பெயரைச் சொல்லித்தான் முதல் விரலை மடிக்க வேண்டியிருக்கிறது. அதனால்த்தான் அவரை நான் முன்மொழிகிறேன். அந்த முன்மொழிதல், நாட்டிற்கு அவர்தான் சிறந்த தலைவர் என்பதற்கான முன்மொழிதல் அன்று. தற்போதைய நாட்டின் நிலமைக்கு அவர்தான் சிறந்த தலைவர் என்பதற்கான முன்மொழிவேயாம். விவாதங்களை நிறுத்திவிட்டு இப்போதைக்கு நாட்டின் முதுகெலும்பைப் பலப்படுத்தவேண்டும். அதன் பின்னர், தேர்தலில் மக்களுக்குரிய தலைவரை நாம் தேர்ந்தெடுக்கலாம் என்பதுதான் எனது கருத்து.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் சொல்லுறது ‘கரீட்டுங்கோ!’ உலகநாதர் வாரிதியாரை வழிமொழிகிறாருங்கோ**

**3. கேள்வி:-** சென்றமுறை தமிழ்நாட்டுத் தலைவர்களோடு ஒப்பிட்டு எங்கள் தலைவர்களின் செயற்பாடு பற்றி எழுதியிருந்தீர்கள். அதைப் பார்த்துவிட்டு நம் தலைவர்களில் யாரேனும் உங்களோடு பேசினார்களா?

**பதில்:-** இதுநாள் வரைக்கும் இல்லாத புதினமாய், நான் ஆச்சரியப்படும் வகையில் கேள்வி பதில் பிரசுரமான ஒரு சில மணித்தியாலங்களுக்குள் மூன்று தலைவர்கள் என்னோடு பேசினார்கள். முதல் முதலாய் நான் எழுதிய பதில்கள் பலனளித்ததாய் நினைந்து மகிழ்ந்தேன். பொதுவெளியில், பேசியவர்களின் பெயர் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அவர்களின் கருத்துக்களை இங்கு பதிவாக்க விரும்புகிறேன்.

ஒருவர் நான் எழுதியிருந்தது சரிதான் என்றும், ஆதரவாளர்களின் தொடர்பைப் பேண எங்களுக்குத் தெரியவில்லைதான் என்றும், அந்த விடயத்தில் நாங்கள் அக்கறை காட்டாதது உண்மைதான் என்றும் சொல்லி, நீங்கள் எழுதிய கலைஞர் பற்றிய கருத்து எங்களுக்கு நல்ல பாடமாக இருந்தது என்று மனந்திறந்து பேசினார்.

மற்றொருவர், நான் எழுதுவதைத் தான் தொடர்ந்து படிப்பதாகவும், ஆனால் இப்போதெல்லாம் எனது கருத்தில் தனக்கு உடன்பாடில்லை என்றும் சொன்னதோடல்லாமல், குறித்த ஒருசிலரை வளர்த்துவிட நினைந்து மட்டுமே நான் எழுதுவதாகவும் குற்றம் சாட்டினார். அதனோடு எனக்குத் தமிழினத்தின் அரசியல் வரலாறு தெரியவில்லை என்றும், அதனால்த்தான் ஆயுதப் போராட்ட வழிவந்த தங்களின் தியாகத்தை மதிக்காமல் இனத்திற்காய் எதுவும் செய்யாத, புதிதாய் வந்த ஒரு சிலரை நீங்கள் மதித்து எழுதி வருகிறீர்கள் என்றும் சற்று படபடப்பாய்ச் சொல்லி தொடர்பை அறுத்துக் கொண்டார்.

மூன்றாமவர், தமிழ்நாட்டுத் தலைவர்களைப் போல நாங்கள் ஏன் இருக்கவேண்டும்;? உங்களைவிட எங்களுக்கு அரசியல் நன்றாகத் தெரியும். உங்கள் கருத்துக்களையெல்லாம் படித்து அதன்படி நாங்கள் நடக்கவேண்டிய அவசியம் இல்லை என்று முறைத்தார்.

ஏனையவர்களிடமிருந்து எந்த அபிப்பிராயமும் வரவில்லை. அவர்;கள் வேறு உலகத்தில் இருக்கிறார்கள் போல. அவர்களை விட்டுவிட்டு மேற்சொன்னவர்களுடைய கருத்தைப் பற்றிய எனது அபிப்பிராயத்தை மட்டும் இங்கு பதிவு செய்கிறேன்.

முதலாவது கருத்தைச் சொன்னவர், அரசியலில் நிலைக்கப் போகிறார் என்று தெரிகிறது. வள்ளுவப் பெருந்தகை, செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கீழ்த் தங்கும் உலகு என்று சொல்லியிருக்கிறார். தவறு செய்யாதவர்கள் என்று உலகில் எவரும் இல்லை. என்னையும் உட்படுத்தித்தான் இதைச் சொல்கிறேன். பெரும்பாலும் எமது புத்தி எங்களுக்கு வக்கீலாய்த்தான் வேலை செய்கிறது. அதனால்தான் நாம், நம் பிழைகளுக்குக் காரணங்கள் தேடிச்சொல்லிச்சொல்லி, பிழைக்குமேல் பிழை செய்து கொண்டிருக்கிறோம். நம் புத்தி என்று நமக்கு நீதிபதியாய் வேலை செய்யத் தொடங்குகிறதோ அன்றுதான் நாம் உருப்படத் தொடங்குவோம். நமது பிழைகளை மற்றவர்கள் சுட்டிக் காட்டும் பொழுது, புத்தியை நீதிபதியாய் வைத்திருப்பவருக்குத் தான் சரி பிழைகளை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வரும். அத்தகைய ஒருவராய்த்தான் முதலாமவர் என் மனதில் பதிந்தார்.

இரண்டாவது கருத்தைச் சொன்ன தலைவர், எனது நீண்டநாள் நண்பர். அவருக்கு தன்னை நான் அடிக்கடி பாராட்டி எழுதுவதில்லை என்ற குறை இருப்பதாய்த் தெரிகிறது. வேறு சிலரை நான் அடிக்கடி பாராட்டும் போது அக்குறை மேலும் வளர்வதாகவும் தெரிகிறது.

குறித்த ஒருசிலரை எனப் பன்மையாய்ச் சொன்னாலும் அவர் சுமந்திரனைத்தான் அப்படிக் குறிக்கிறார் என்பதை நான் விளங்கிக் கொண்டேன். அதுபற்றி இங்கு சில எழுதவேண்டியிருக்கிறது. அவர் நினைப்பது போல நான் சுமந்திரனின் பக்தனோ, ரசிகனோ அல்லன். சுமந்திரனை நான் அடிக்கடி பாராட்டி எழுதுகிறேன் என்பது உண்மைதான். அப்படி எழுதுவது அவரைச் சந்தோப்படுத்துவதற்காக அல்ல. அது எனது வேலையும் இல்லை. பெரும்பாலும் அவர் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அறிவுபூர்வமாக சரியான செயல்களைச் செய்ய முனைகிறார். அப்போது அவரைப் பாராட்ட வேண்டியிருக்கிறது.

அதே நேரத்தில் அவர் பிழை செய்வதாய் நான் நினைக்கும் பொழுதெல்லாம் அவரை நான் கண்டிக்கவும் தவறுவதில்லை. தகுதியுள்ள புதிய தலைவர்களை உருவாக்கும் தகுதியை இழந்து நிற்கிறது கூட்டமைப்பு. அதனால்த்தான் இருக்கும் ஒரு சிலரையே திரும்பத் திரும்பப் பாராட்ட வேண்டியிருக்கிறது. அது என் குறையல்ல. கட்சியின் குறை.

மற்றொன்று, தனிப்பட்ட நட்பு என்பது வேறு. ஒரு விடயம் பற்றிய விமர்சனம் என்பது வேறு. நட்புக்காகப் பாராட்டியும், பகைக்காகத் தூற்றியும் எழுதினால் அது நீதியாகாது. பேனை குனிந்து எழுதலாம் எழுதுபவன் நிமிர்ந்து நிற்கவேண்டும். தேவைக்காகப் பாராட்டுவதானால் மேற்கருத்தைச் சொன்ன நண்பரைத்தான் நான் அதிகம் பாராட்டவேண்டும். அந்த அளவு அவர் என்னை மதிப்பவர். எனக்கு உதவிகள் பல செய்தவர். இவற்றிற்காக நான் நன்றியாய் இருக்கமுடியுமே தவிர, எழுத்தில் அதனைக் காட்ட முடியாது. நட்புக்காக விமர்சனம் எழுதப் புறப்பட்டால், அதில் ‘வேசித்தனம்’ வந்துவிடும். அதனை ஒருகாலும் நான் செய்ததும் இல்லை. இனிச் செய்யவும் மாட்டேன்.

எனக்கு அரசியல் வரலாறு தெரியவில்லை என்று அவர் சொன்னதும் ஆச்சரியமாக இருந்தது. குறித்த கருத்தைச் சொன்ன அவரைவிட நான் வயதில் மூத்தவன். கிட்டத்தட்ட எம் இனத்தின் நான்கு தலைமுறைத் தலைவர்களோடு நான் பழகியிருக்கிறேன். இப்போது பலர், ஆயுதப் போராட்டக் காலத்திற்குப் பின்தான் நம் அரசியல் வரலாறு தொடங்குவதாக நினைத்துக் கொள்கிறார்கள். அது தவறு. ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கு முன்பே நம் தலைவர்கள் பலர் இனத்திற்காக உண்மையாய்ப் பாடுபட்டிருக்கிறார்கள். எம் மண்ணுக்காக ஆயுதம் தூக்கிப் போராடித் தம்மை அர்ப்பணித்தவர்களின் பெயர்களைச் சொல்லிச் சொல்லி இனியும் நாம் காலம் கழிக்க முடியாது. அப்போராளிகளுக்கு நாம் செய்யும்கடமை ‘நான்’ எனும் எண்ணத்தைவிட்டு ‘நாம்’ என இணைந்து இனத்திற்கான உரிமைகளைப் பெற முயல்வதேயாம். அச் செயலில் ஈடுபடும் அனைவரையும் என் மனம் நேசிக்கும் என்பது நிச்சயம்.

மூன்றாவதாய் அபிப்பிராயம் சொன்னவர் ஆணவத்தின் உச்சியில் அமர்ந்திருக்கிறார். அவரால் தமிழினம் உருப்படப் போவதில்லை என்பது நிச்சயம். விரைவில் தமிழினம் அவரைக் கைகழுவி விட்டுவிடும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாரின் ‘கெத்து’ வரவேற்கப்படவேண்டியது தான்.**

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!


## இந்தியத் தூதரக செயலாளர்களின் கணிப்புகள்

**அங்கம் - 111**

தென்பகுதியில் நிலைமைகளை கணக்கிட – இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனரா என அளவீடு செய்ய – திம்பு மாநாட்டுப் பேச்சு காலங்களில் உருவாகிய பேரினவாதக் கூட்டுக்களை அவர்கள் உற்று நோக்கினர்.

அந்தப் பேரினவாத செயற்பாடு வெறும் அரசியல் லாப நோக்கம் கொண்டதா அல்லது இனப் பிரச்சினைக்குத் தீர்வு தருவதே இல்லை என்ற கங்கணமா என்பதையும் கவனிக்க வேண்டியிருந்தது.

தமிழ் மக்கள் தாங்கள் தீர்மானித்த தமிழ் ஈழம் என்பதையே திரும்பத் திரும்ப உச்சரித்து, உருப்போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் பேரினவாத கட்டமைப்புகளையும் அவற்றின் தாக்கங்க



சிறிமாவோ

ளையும் தங்களது அணுகுமுறைகளுக்கு அவசியமாக அவர்கள் பார்க்கவில்லை. பேரினவாதிகள் எதையும் செய்யட்டும் எங்களது 'பொடியன்களின்' ஆயுதங்கள் பேசும் என்ற மன கிளுகிளுப்பிலேயே இருந்தார்கள்.

1986இல் இனப் பிரச்சினைக்கக்கான தீர்வு ஒன்று அதிகாரப் பரவல் முறையில் அணுகப்படுகிறது என்ற விடயம் அறிவிக்கப்பட்ட பொழுதே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, மகாஜன எக்ஸத் பெரமுன (MEP), ஜே.வி.பி. மூன்றும் ஒன்று சேர்ந்தன.

வழமை போல இந்த இணைப்பு சிறியளவிலான அரசியல் ஆதாயங்களுக்காகவே நடந்தது.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்காக 'மௌபிம சுரக்குமி வியாபாரய' (MSV) – அதாவது தாய் நாட்டை பாதுகாக்கும் இயக்கம் – என்பது தோற்றுவிக்கப்பட்டது.

இதன் முன்னணித் தலைவர்களாக வணக்கத்திற்குரிய மடிகலே பன்ன திஸ்ஸ தேரர், கலாநிதி பெல்லன்வில விமலரத்ன தேரர், மாதுலுவவே சோபித தேரர் போன்றோர் இருந்தனர்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இந்த அமைப்பு இரண்டாக நவம்பர் 86 இல் பிரியும் வரை இதனை ஆதரித்தார்.

இந்தப் பிரிவின் தீவிரவாதிகளாக அந்த அமைப்பில் (MSV) வணக்கத்திற்குரிய சோபித தேரர், ஆனந்த தேரர், தினேஷ் குணவர்தன (தற்போதைய பிரதமர், அப்பொழுது மகாஜன எக்ஸத் பெரமுனவின் தலைவராக இருந்தார்), பிரின்ஸ் குணசேகர, வணக்கத்திற்குரிய பாலகருவே சோமா ஆரியதேவ தேரர் போன்றோர் ஜே.வி.பி. பங்குகளில் இருந்தனர்.



சி.வி.குணரட்ண


அடுத்த பகுதி கொஞ்சம் தீவிரவாதம் குறைந்ததாக ஆனால் நோக்கத்தில் ஒன்றாக 'மௌபிம சுரங்கீம சங்கமய (MSS) என இயங்கினர். அதில் திருமதி ஸ்ரீமாவோ, ஜினதாச நியதபால, வணக்கத்திற்குரிய பெங்கமுவக்ஷ நாலக தேரர் போன்றோர் இருந்தனர்.

அவர்களின் பிரிவினைக்கு MSV ஸ்ரீலங்காசுதந்திரகட்சியின்அனுசரணையின்றி தம் இஷ்டத்தில் தாய் நாட்டுக்கான படையாக ஒவ்வொரு கிராமத்திலும் 100 பேரை திரட்ட தலைபட்டமை காரணமாயிற்று.

இந்திய ஒப்பந்தம் எதுவும் நடந்தால் அது தாய் நாட்டுக்கு அழிவாக முடியும் என்று மக்களிடையே ஆதரவு தேட அவற்



தினேஷ் குணவர்த்தன



நெவில் பெர்னாண்டோ

றுக்கு பல காலம் தேவை இருக்கவில்லை. பொதுப்படையாகவே மக்கள் இனரீதியாக ஆதரவு தந்தார்கள். ஆனால் எந்த விதத்தில் அதிகாரப்பரவல் வரும் என்பதை யாருமே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரையில் தெரிந்து கொண்டிருக்கவில்லை.

அது நடந்ததும், இவர்களோடு ஐக்கிய தேசியக் கட்சியின் பல பெரும் புள்ளிகளும் இணைந்து கொண்டார்கள்.

திருமதி ஸ்ரீமாவோ தமது சுதந்திரக் கட்சியின் பொதுக்குழுவைக் கூட்டி எப்படி எதிர்ப்புகள் நடத்த வேண்டும் என்ற திட்டவட்ட அடிப்படையில் தன் வீட்டு முகவரியில் இருந்து வெளியிடப்பட்ட துண்டு பிரசுரத்தில் குறிப்பிட்டு, கோட்டை பிரதான ரயில் நிலையத்தின் முன் தேசப்பற்றாளர்களை ஒன்று கூறுமாறு கோரினார்.

இது 1987 ஜூலை 28 காலை 8 மணிக்கு. கூட்டுப்பிரதர் பிரார்த்தனையாகவும், அதேபோல ஜூலை 27 னிறீ வித்யாலங்கார பிரிவினையில் கூட்டமும் நடத்தினார்கள்.

சுதந்திரக் கட்சி தங்களது கட்சிக்கு ஆதரவான பிக்குகள் யாவரையும் தத்தமது ஊர்களிலேயே நாட்டுக்காகப் பிரார்த்தனைகள் வைக்கக் கேட்டார்கள்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு 24 மணித்தியாலங்களில் முன் அதன் எதிர்ப்பு போராட்டமாக காலை 8.30 மணிக்கு வணக்கத்திற்குரிய சோபித்த ஆனந்த தேரர் போன்றோர் புறக்கோட்டை அரச மரத்தடியில் சந்திப்பு ஏற்படுத்த, அங்கு லக்ஷ்மன் ஜெயக்கொடி, ஹலீம் இாக், அனில் முனசிங்க, ரிச்சர்ட் பத்தின, மைத்திரிபால சேனநாயக்கா, ஆனந்த தஸநாயக்க, சோமசார தஸநாயக்க, சி.வி.குணரட்ண, வைத்தியர் நெவில் பெர்னாண்டோ போன்ற பலர் சுதந்திர கட்சியில் இருந்துவந்துசேர்ந்தனர். சற்று நேரத்தில் திருமதி சிறிமாவோவும், அவரது மகன் அனுராவும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வாகனப் போக்குவரத்தைத் தடைசெய்ய, பொலிஸார் அதை தடுக்க, பொதுமக்கள் கட்டடங்களுக்குத் தீ வைத்து அட்டகாசம் செய்ய, பொலிஸார் சுடவும் நேர்ந்தது. இது கொழும்பின் பல பகுதிகளுக்கும் படர்ந்து, பாணந்துறை வரைப் பரவி யது.

அடுத்த நாள் ஜூலை 29 இல் – ஒப்பந்த நாளில் – ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்தாலும், வன்முறைகள் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை எனப் பல பகுதிகளுக்கும் ஜே.வி.பியின் முன்னெடுப்பில் விரிந்தன.

ஜே.வி.பி. உட்பட்ட இந்த கட்டமைப்புகளால் 1987 ஜூலை 28க்கும் ஓகஸ்ட் 2க்கும் இடையில் 2,527 சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 16 பேர் கொலையுண்டனர். பலர் காயம் அடைந்தனர். 529 பொதுக் கட்டடங்கள் எரிக்கப்பட்டன அன்றேல் தாக்கப்பட்டன. பல



மைத்திரிபால சேனநாயக்கா

பஸ்கள், ரயில்கள் எரிக்கப்பட்டன. அந்த வன்முறையின் வேகம் இந்திய ஒப்பந்தம்



லக்ஷ்மன் ஜெயக்கொடி

அப்பகுதிப் பேரினவாதத்துக்கு தந்த ஊக்கம் எனத் தூதரகத்தின் காரியதரிசிகள் அபிப்பிராயப்பட்டார்கள்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டா திடீரென பதவி விலகியமையால் 69 லட்சம் வாக்குகளை இழந்துள்ளோம்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வேதனை



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திடீரென பதவி விலகியதன் பின்னர் 69 லட்சம் வாக்குகளை நாம் இழந்துள்ளோம் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் முன்மொழிந்துள்ளார். உண்மையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எடுத்த மிகக் கடின மான முடிவு இதுவாகும் எனவும் அமைச்சர் பிரசன்ன கூறினார்.

எவ்வாறாயினும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன 67 லட்சம் வாக்குகளைப் பெற்று 145 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட் டனர்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை தக்க வைக்க 113 எம்பிக்கள் இருக்க வேண்டும். ஆனால் நாடாளுமன்றத்தில் 145 எம்பிக்கள் உள்ளனர்.

எமது கட்சிக்குப் பெரும்பான்மை இருக்கின்றபோதும் பொதுஜன பெரமுனவைச் சேராத ஒருவரை நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அழைப்பு விடுத் தோம்.

பின்னர் நாங்கள் முன்மொழிந்த ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பெரும்பான்மையுடன் தெரிவு செய்யப்பட்ட அர சாங்கமும் அரசியல் நிகழ்ச்சி நிரலை நோக்கி இழுத்துச் செல்லப்பட்ட போராட்டங்களின் அழுத்தத்தின் விளை வாகப் பதவி விலக நேரிட்டது.

எனவே, ஒரு கட்சியாக நாங்கள் பொதுவிருப்பத்துக்கு மதிப்பளிக்க முடிவு செய்தோம். இருப்பினும், தனிப்பட்ட முறையில் நான் அதைப் பொதுவிருப்பமாக ஏற்க வில்லை.

ஒரு குறிப்பிட்ட குழுவினரின் வேண்டுகோளுக்கு இணங்க, எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மக்கள் திரண்டனர். அது இறுதியில் அந்த அரசியல் மாற்றங்களை ஏற்படுத்த வழிவகுத்தது.

எனவே, பொதுஜன பெரமுன மிகப்பெரிய தியா கத்தை செய்து வருகிறது. பிரதான எதிர்க்கட்சியான ஐக் கிய மக்கள் சக்தி இடைக்கால அரசாங்கத்தை அமைக் கக் கைகோர்க்க வேண்டுமென அவர்களின் முன்னாள் தலைவராக இருந்த இன்றைய ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கிலே சீனாவினுடைய ஆதிக்கத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது!

## செல்வம் எம்.பி. திட்டவட்டம்

வடக்கிலே சீனாவினுடைய ஆதிக்கம் என்பதை ஒருபோதும் ஏற் றுக்கொள்ள முடியாது என நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பில் வைத்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள் ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

அண்மைக்காலமாக சீனாவினு டைய கப்பல் ஒரு சர்ச்சையாக இலங் கையிலே பேசப்பட்டது.

இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கின்ற எச்சரிக் கையை மீறி அரசாங்கம் சீன கப் பலை உள்ளே அனுமதித்தது.

தற்போது மீண்டும் சீனாவினு டைய ஆதிக்கம் தொடர்வதாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

அந்தவகையிலே வடக்கிலே சீனாவினுடைய பிரதிநிதிகள், அவர் களுடைய முகவர்கள் கூடுதலாகக் களம் இறக்கப்பட்டிருக்கிறார்கள்.

அட்டைப்பண்ணை, இறால் பண்ணை இவ்வாறு அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களை அதற்குள்ளே சிக்க வைத்து இந்தி யாவிற்கு எதிரானவர்களாகக் கொண்டு வருவதற்கான முயற்சி களை மேற்கொள்கின்ற ஒரு சந்தர்ப் பத்தை சீனா செய்கின்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆகவே அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அயல் நாடான இந்தியா வின் பாதுகாப்பைத் தமிழர்கள் பாது காக்க வேண்டும் என்பது எங்களு டைய கடமையாக இருக்கின்றது. ஏனென்றால் கரையோர பகுதியிலே இருப்பது தமிழர்களே.

சீனாவினுடைய ஆதிக்கம் வடக் கிலே குறிப்பாக கரையோர பிரதே சங்களிலே அவர்களுடைய கால் பதிப்பு என்பதை அனுமதிக்க முடி யாது.

அபிவிருத்தி என்பதை மேற் கொள்ள வேண்டும் என்றால் அது சீனாவின் முதலீடாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்து.

ஏனைய நாடுகள், ஏன் அயல் நாடான இந்தியாவில் கூட அபிவி ருத்தி பணியிலே பண்ணைகளை ஊக்குவிப்பதற்கான செயற்பாடு



களைச் செய்யலாம்.

எங்களைப் பொறுத்தமட்டில் வடக்கிலே சீனாவினுடைய ஆதிக் கம் என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அது இந்தியாவினுடைய பாது காப்பை தமிழர்கள் இன்றும் பாது காத்துக் கொண்டிருக்கின்ற சூழ லிலே அதனை சிதைக்கின்ற வாய்ப் பாகக் கடலோர பகுதிகளிலே சீனா வினுடைய முதலீடுகள் வருகின் றமை கண்டிக்கத்தக்கது. அதனை அனுமதிக்க முடியாது எனக் குறிப் பிட்டுள்ளார்.

# ஜெக்குலின் பெர்னாண்டஸுக்கு இலங்கையில் வீடு கொள்வனவு!

## வெளியாகியுள்ள தகவல்



சுகேஷ் சந்திரசேகர், இலங்கை நடிகை ஜெக்குலின் பெர்னாண்டஸுக்கு இலங்கையில் வீடு ஒன்றை கொள் வனவு செய்ததுடன், அவருக்காக மும்பையின் உயர் மட்ட ஜுஹூ பகுதியில் உள்ள பங்களாவுக்கு முற்பணம் கொடுத்ததாக இந்திய சட்ட இயக்குநரகத்தின் குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின்படி சுகேஷ், தனது நண்பரான பிங்கி இரானியிடம் வீடுகளை வாங்கும் திட்டத்தைப் பற்றி கூறினார் எனக் கூறப்படுகிறது.

ஜெக்குலின் பெர்னாண்டஸை தனக்கு அறிமுகப் படுத்த பிங்கி இரானியை சுகேஷ் பணித்துள்ளதுடன், அந்த வேலைக்காக அவருக்கு பல கோடி ரூபா சம்பளம் வழங்கினார் எனவும் கூறப்படுகிறது.

மும்பையின் ஜுஹு கடற்கரை பகுதியில் ஜெக்குலி னுக்கு வீடு வாங்க பணம் கொடுத்தார் எனவும், பஹ்ரை னில் உள்ள நடிகையின் பெற்றோருக்கு ஏற்கனவே ஒரு வீட்டைப் பரிசாக கொடுத்தார் எனவும் சுகேஷ் சந்திர சேகர் பிங்கி இரானியிடம் தெரிவித்தார்.

மேலும், நடிகைக்கு இலங்கையில் வீடு வாங்க பேரம் பேசியதாகவும் குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக அதிகாரிகள் ஜெக்குலினிடம் விசா ரித்தபோது, சுகேஷ் தனக்காக இலங்கையில் உள்ள வெலிகமவில் ஒரு சொத்து வாங்கினார் என ஜெக்குலின் ஒப்புக்கொண்டுள்ளார்.

இருப்பினும், அவர் அந்த சொத்தை பார்க்கவே இல்லை என்று குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. வெலிகம இலங்கையின் ஒரு பிரபலமான சுற்றுலாத் தளமாகும், மேலும் அதன் கடற்கரை மிகவும் பெயர் பெற்றது.

இந்த சொத்து உண்மையில் சுகேஷ் வாங்கப்பட்டதா அல்லது அவர், ஜெக்குலினிடம் பொய் சொன்னாரா என்பதை இன்னும் கண்டறியவில்லை.

அத்துடன் ஜெக்குலின் பெர்னாண்டஸ் அல்லது அவ ரது உறவினர்களுக்காக சுகேஷ் வேறு ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டாரா என்பது இன்னும் கண்டறியப்பட வில்லை என்று குற்றப்பத்திரிகை மேலும் கூறியுள்ளது.

சுகேஷ் சந்திரசேகர், ஜெகுலினுக்கு 7 கோடி ரூபா வுக்கு மேல் நகைகளை பரிசாக அளித்தார் எனக் கூறப் படுகிறது. அவர் பல உயர் ரக கார்கள், விலையுயர்ந்த பைகள், உடைகள், காலணிகள் மற்றும் விலையுயர்ந்த கடிகாரங்களை நடிகை மற்றும் அவரது குடும்ப உறுப்பி னர்களுக்கு பரிசாக அளித்துள்ளார் என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

# இலங்கைக்குப் பணம் அனுப்ப வேண்டாம் வெளிநாட்டவரிடம் பொன்சேகா கோரிக்கை!

அரச பயங்கரவாதம் செயற்படும் நாடான இலங் கைக்கு பணம் அனுப்புவதை தவிர்க்குமாறு வெளிநாடு களில் வாழும் இலங்கையர்களிடம் கோரிக்கை விடுப் பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்று வரும் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

இந்த அரச பயங்கரவாதம் நிறுத்தப்படும் வரை ஒரு பைசாகூட இந்த நாட்டுக்கு அனுப்ப வேண்டாம் என்று வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாங்கள் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் பசியால் சாகத் தயாராக இருந்தாலும் ஐந்து காசுகூட அனுப்ப வேண்டாம். இந்த அரசுக்கு உத வாதீர்கள். சர்வதேசநாணயநிதியில் என்ன கிடைக்கி றதோ அதுவே கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித் தார்.

# வவுனியாவில் இந்த வருடம் 4 காட்டு யானைகள் சாவு!

வவுனியா மாவட்டத்தில் கடந்த 8 மாதங்களில் மாத் திரம் நான்கு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிகின்றன.

தற்போது வவுனியா மாவட்டத்தில் காடு அழிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையால், காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழை வதோடு, மக்களின் வாழ்வாதாரங்களும் பாதிக்கப் படுகின்றன.

இந்நிலையில், மேற்படி பகுதியிலுள்ள மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வாழ்ந்து வருகின் றார்கள்.

இந்த வருடம் 8 மாதங்களில் 4 யானைகள் மாத்தி ரம் உயிரிழந்துள்ள அதேவேளை, கடந்த வருடத்தில் 10 யானைகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக் கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.09.2022இல் வெளியிடப்பெற்றது.